***World Christian Fellowship***
www.wcflondon.com
wcflondon@gmail.com

# வேதம் நிறைவு தன்மை கொண்டது 01
## *Sufficiency of Scripture*

நாம் ஏற்கனவே வேதாகமம் பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்டது, பிழையற்றது மற்றும் நம்பகத்தன்மை கொண்டது என்பதை குறித்து விரிவாக பார்த்தோம்.

இப்பொழுது எப்படி வேதம் நிறைவு தன்மை கொண்டது என்பதை பார்ப்போம்.

தற்பொழுது சாத்தானால் தந்திரமாய் கையாளப்பட்டு வேதத்தின் நிறைவு தன்மையை களங்கப்படுத்துகிறவர்கள் நிறைய பேர் தங்களை கிறிஸ்தவர்கள் என்றே அடையாளம் காட்டுகின்றனர். வேதத்தின் நிறைவுத்தன்மையின் மீது வரும் தாக்குதலானது முதலில் வேதத்தின் மீது உள்ள விசுவாசம் மற்றும் நடத்தையின் தன்மையை நிராகரிப்பவர்களே மூலமாகவே துவங்குகிறது.

வேதத்தின் மீதான தாக்குதலில் ஆச்சரியப்படத்தக்க காரியம் என்னவென்றால் இது வேதத்தை நிராகரிப்பவர்கள் மூலம் வருபவை அல்ல அதை உறுதியாக நம்புகிறவர்கள் மூலமாகவே வருகிறது.

தேவனின் வார்த்தையை மிகவும் அதிகமாக களங்கப்படுத்த முற்படுபவர்கள் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும் கிறிஸ்தவர்களாக நம்முள் ஒருவராகவே உள்ளனர். தன்னை வேதத்தை விசுவாசிப்பவர்கள் என்றும்,தேவனுடைய

*வார்த்தையை விசுவாசிப்பவர்கள் என்றும் சொல்லும் மக்கள் அதன் நிறைவு தன்மையின் மேல் நம்பிக்கை இல்லாமல் தேவனுக்கும் அவர் வார்த்தைக்கும் விரோதமாய் அதாவது முதுகில் குத்துவது போல் பேசுகிறார்கள்.*

### *1. உலக காரியங்கள் சபைக்குள் வந்து விட்டது*

*கடந்த சில யுகங்களாய் நிர்வாகத்தன்மை அல்லது நிர்வகிக்கும் வழிமுறைகள் மூலமாய் ஆத்துமாக்களை அதிகரிக்கும் முறை சபைக்குள் அமைதியாக கலந்து விட்டதை நாம் காணமுடியும்.*

*சபை தலைவர்கள், நிர்வகிக்கும் வழிமுறை புத்தகங்களை பின்பற்றவும் பெரிய பன்னாட்டு நிறுவனங்களின் வழிநடத்தும் முறைகளை தேவ ராஜ்யத்தை நிர்வகிக்க பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். தலைமைத்துவத்தை கற்பிக்க படும் மேடை பேச்சுக்கள் பெருகி, வேதத்தை தவிர்த்து எப்படி நிர்வகிப்பது என்று கற்றுக்கொடுக்கிறார்கள். அப்படி செய்வதால் என்ன ஆகிறது, ஆண்டவருடைய வார்த்தையை நாம் அறிந்தும் புரிந்தும் அவரின் கொள்கைகளை பற்றி தெரிந்தும் அவைகள் சபையை வளர்க்க அவைகள் போதுமானது அல்ல என்பது போல் ஆகி விடுகிறது. உலகத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் உபயோகிக்கும் நிர்வாக யுக்திகள் மற்றும் அமைப்புகள் மூலம் தான் சபையை நிர்வகிக்க கற்றுக்கொள்ள முடியும் என்றாகி விடுகிறது. சபையை வளர்க்க அதுதான் வழி என்று கொண்டு வந்து விட்டார்கள். இது முழுமையாக சாத்தானின் தந்திரமே ஆகும்!*

## 2. சபை மக்களை மகிழ்விக்க அல்லது குதூகலப்படுத்த வேண்டும்

எதிர்பாராதவிதமாக மக்களை மகிழ்விப்பதற்கு ஏற்ற தலைவர்களை தேர்ந்தெடுத்து மக்களை குஷிப்படுத்த அவர்களுக்கு அறிவுறுத்துகின்றனர். சபைகள் அதற்காக மிகப்பெரிய தொகையை செலவழிக்கின்றனர்.

மக்களுக்கு தேவையானது தேவனுடைய வார்த்தை தான் அதை விட்டுவிட்டு சபைகள் இசைகள், ஒளிவிளக்குகள், ஆடல் பாடல் என குஷிப்படுத்த தொடங்கியதால் மக்களை தேவனிடம் ஈர்க்க தேவனுடைய வார்த்தை மட்டும் போதாது என்று எண்ணம் தோன்றுகிறது.

சபை போதகர்களும் தலைவர்களும் ஏதோ ஒரு பிரபலமானவர்கள் போல வாழவும் நடந்து கொள்ளவும் தொடங்கி அவர்கள் வழக்கை முறையே மாறி விட்டது. புதிய சபை போதகர்களும் தலைவர்களும் இதே போல் வாழ்க்கையை தான் வாழ விரும்புகின்றனர், இயேசுவை போல் ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ விரும்புவது இல்லை.

- ✓ இசை அதிகமாக உள்ளது உண்மையான ஆராதனை இல்லை
- ✓ உற்சாகம் அதிகமாக உள்ளது ஆனால் மனம் திரும்புதல் இல்லைe
- ✓ வேடிக்கை அதிகமாக உள்ளது ஆனால் வாழ்க்கையில் இருந்து ஒன்றும் கற்றுக்கொள்ளும் படி இல்லைs

உதடுகளினால் செய்யும் ஆராதனை உண்டு ஆனால் ஆவிக்குரிய போருக்கு தகுதிப்படுத்துவது இல்லை.

## 3. அற்புதங்களை நிகழ்த்தி காட்ட வேண்டும்

அற்புதங்களையும் அடையாளங்களையும் தேடும் மக்கள் பலர். சுகமளிக்கும் கூட்டம் மற்றும் அற்புதங்கள் நிகழ்த்தும் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

பல கோடி பணம் இந்த மாதிரியான கூட்டங்களுக்கு விளம்பரம் செய்ய செலவு செய்யப்படுகிறது பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் அற்புதத்திற்காகவும் சுகத்திற்காகவும் இப்படிப்பட்ட கூட்டத்தை தேடி செல்கின்றனர்.

இப்படிப்பட்ட கூட்டங்களை நடத்துபவர்கள் வெறும் சுவிசேஷத்தை மட்டும் வைத்து கொண்டு உலக அளவில் பிரபலமாக முடியாது எனவே மரித்தோரை எழுப்புதல் வியாதியஸ்தரை குணப்படுத்துதல் மற்றும் வானத்தில் இருந்து அக்கினி இறக்குகிறேன் போன்ற காரியங்களை நடப்பிக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட குழுவை சேர்ந்த பிரபலமான போதகர் ஒருவர் சமீபத்தில் அமெரிக்க வேதாகம கல்லூரிகளின் ஐக்கிய கூட்டத்தில் கூறுகிறார் "அற்புதங்களும் அடையாளங்களும் இல்லாமல் சுவிசேஷம் உரைத்தல் முழுமை பெறாது என்று".

தேவ வார்த்தையினால் மக்களை பெலப்படுத்துவதை விட்டுவிட்டு மக்களை ஏதோ சக்தி செயல்படும் இடத்தை நோக்கி செல்ல கட்டாயப்படுத்துவது போல் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியை கொண்டு அற்புதங்களும் அடையாளங்களும் நிகழ்த்தும் இடங்களுக்கு ஓடும் படி செய்கிறார்கள்.

## *4. மாய மந்திரங்கள் மூலமாய் வசீகரிக்கிறார்கள்*

*மாய மந்திரங்கள் மூலமாய் மக்களை வசீகரிக்கும் கூட்டமும் இருக்கிறார்கள்.*

***சாதகமான பேச்சு:***

*பிசாசையும் சாதனையும் எதிர்க்கொள்ள வழி முறைகளையும் கற்பனை யுக்திகளையும் சொல்லிக்கொடுக்கிறார்கள். எனவே கற்பனை சக்தி மூலமாய் நீங்கள் சொல்வது எதுவோ அது உண்மையாகவே உங்கள் வாழ்க்கையிலும் கற்பனை செய்த படியே நிறைவேறும் என்கின்றனர்.*

*அது உங்கள் சுகத்திற்கு வேண்டி இருக்கலாம்,*
*புதிய வீடாக இருக்கலாம்,*
*புதிய காராக இருக்கலாம்,*
*வாழ்க்கை துணையாக இருக்கலாம்,*
*உங்கள் பிள்ளைகளுக்காய் இருக்கலாம்,*
*உங்கள் பொருளாதாரம் அல்லது எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம்*
*ஊழியத்தை நன்றக வளர்க்க வேண்டுமானால், இந்த மிகவும் முக்கியமான சுயமாக கற்பனை செய்து மக்களை மகிழ்விக்கும் யுக்தி அறிந்து இருக்க வேண்டும் என்கின்றனர். அதை அறிக்கை செய்து பெற்று கொள்வீர் என்று அழைக்கிறார்கள்!*

***உள்ளுணர்வு சக்தி:***

*அவர்கள் அதற்காக பயற்சி எடுத்து தெய்வீக சக்தியை அடைவதாகவும் அதை "புதிய அறிவியல் சார்ந்த மதமாகவும்" கருதுகின்றனர்." மக்கள் பலர் தற்போது கிழக்கத்திய மற்றும் இந்து மதத்தை சேர்வதை காண முடியும்,*

அதனால் கிழக்கத்திய நாடுகளின் வல்லமையை உலகிற்கு எடுத்துரைக்க முடியும் என்று நம்புகின்றனர்.

சிந்தனை அல்லது உள்ளுணர்வு சக்தியை வளர்த்துக் கொள்கின்றனர். மக்கள் பேய்கள், பிசாசுகள் மற்றும் நோய்கள் மீது அதிகாரம் கொண்டவர்களாய் தங்களை கருதிக்கொள்கின்றனர். இப்படிப்பட்ட மக்கள் தங்களுக்கு உள்ள ஆத்துமசக்திக்கு ஏதும் பெயர் சூட்டிக்கொண்டு சாத்தான்களையும் அவன் சேனைகளையும் மட்டுமில்லாமல் வியாதிகளையும், நோய்களையும் மற்றும் எதிர்மறையான சூழ்நிலைமைகளுக்கும் கட்டளைக்கொடுக்கின்றனர்.

**குடும்ப பிரச்சனைகளுக்கு தீர்வு அளித்தல்:**

மக்கள் குடும்ப பிரச்சனைகளுக்கு தீர்வுக்காக வேதாகமத்தை ஆர்வமாக நாடிய காலங்கள் போயே போச்சு. வேதாகமத்தை முழுமையாக படித்தால் குடும்ப வாழ்க்கையை முழுமையாக வாழமுடியும் என்பதை மக்கள் மறந்துவிட்டனர், அந்த திருமண வாழ்வானது தேவன் எதிர்பார்த்த அளவிற்கு வாழவேண்டுமானால் வேதாகமத்தில் உள்ள அறிவுரைகளை பின்பற்ற வேண்டும் என்பதையெல்லாம் மறந்துவிட்டனர்.

வேதாகமத்தில் கூறப்பட்ட படி வாழ்ந்தால் தேவன் எதிர்பார்த்தபடி குடும்பம் அமையும். ஆனால் இப்பொழுதோ குடும்ப பிரச்சனைகளுக்கு யுக்திகளும், தந்திரங்களும், உடலுறவு ஆலோசனைகளும் வேதாகமத்தில் சொல்லப்பட்டது போலவே கற்பிக்கப்படுகிறது .

வேதம் சமூகவியல் குறித்து கூறியவைகளை நாம் தாராளமாக ஏற்றுக்கொள்ளலாம் அது ஓரினசேர்க்கையை பற்றியதாக இருக்கட்டும் அல்லது ஒரு பெண்ணிற்கு சமூகத்தில் உள்ள பங்கு பற்றியதாக இருக்கட்டும்.

நவீன காலத்தில் வேதம் எளிமையானது மற்றும் பழமையானது என்ற கூற்றும் எங்கும் காணப்படுகிறது. எப்படி நமது கணினி மற்றும் மென்பொருள் சாதனங்கள் காலத்திற்கு ஏற்ற தொழில்நுட்பங்களை உள்ளடக்கியுள்ளதோ அதே போல் வேதகமும் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது.

இதில் மிகவும் ஜாக்கிரதைப்படுத்தக்கூடிய விஷயம் என்னவென்றால் ஓரினசேர்க்கையை குறித்து எச்சரித்து புத்தி சொல்லவேண்டிய சபை போதகர்களே அந்த பாவத்தை செய்து கொண்டு சபையிலே இருக்கிறார்கள்.

**உளவியல்:**

நம்மை அச்சுறுத்தக்கூடிய அடுத்த காரியம் உளவியல் கொள்கைகள் சபைக்குள் வந்துவிட்டன. சுவிசேஷ சபைகள் வேதாகமத்தில் சொல்லப்பட்டவைகளை போதிப்பதை விட்டுவிட்டு உளவியல் சம்மந்தமான கொள்கைகள் மட்டும் கோட்பாடுகளை போதிக்கும் வியாபார ஸ்தலமாகிவிட்டது. ஒரு காலத்தில் ஊழியத்திற்கு போதர்களையும் சுவிசேஷேகர்களை நியமித்த சபைகள் இப்பொழுது உளவியல் நிபுணர்களை நியமிக்கிறது.

வேதாகம கல்லூரிக்கும் வேத கருத்தரங்கிற்கும் சென்ற போதகர்கள் இப்பொழுது உளவியல் சம்மந்தப்பட்ட பள்ளி அல்லது கல்லூரிக்கு செல்கின்றனர் எதற்கு என்றால் ஞானத்தில் கற்று தேர்ந்து மனிதர்களின் பிரச்சனையை தீர்க்கவே.

கருத்தரங்குகள் தற்பொழுது தங்களின் கருப்பொருளை மாற்றிக்கொண்டே வருகின்றனர். முதன் முறையாக சபையின் வரலாற்றில் கருத்தரங்கு நிர்வகிப்பாளர்கள்

*உளவியல் நிபுணர்களை தெரிவு செய்து அவர்களின் பணியாட்களுக்கு உளவியல் சம்மந்தப்பட்டவைகளை கற்பிக்க நியமிக்கிறது.*

*எனவே உளவியல் சம்மந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு வேதாகமம் தீர்வு சொல்ல முடியாது என்று உலகம் சொல்லுகிறது இதில் சோகம் என்னவென்றால் சபையும் இதை பின்பற்றுகிறது.*

*இப்படிப்பட்ட பிரச்சனைகளில் நாம் நிலையில்லாமல் காணப்படுவதால் காரணம் நாம் சத்தியத்தை பார்க்கும் பார்வை தவறானதாக உள்ளது.*

*நிறைய கிறிஸ்தவர்கள் வேதாகமம், வாழ்க்கை மற்றும் சபை நடத்த போதுமானதாக இல்லை என்று எண்ணுகின்றனர். இது ஒரு பாவம். மற்றும் தேவனுடைய வார்த்தையை நமக்கு ஏற்றாற்போல் மாற்றுவதே மிக பெரிய பாவம்.*

*இதற்கான விடையை இப்பொழுது காண்போம்!*

***2 கொரிந்தியர் 3:5, எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பதுபோல ஒன்றை யோசிக்கிறதற்கு நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது***

- *நம்முடைய தகுதி மனிதர்களால் வருவது அல்ல,*
- *நம்முடைய தகுதி மனித ஞானத்தால் வருவது அல்ல.*
- *நம்முடைய தகுதி மனிதர்கள் மூலமாய் வருவது அல்ல.*
- *நம்முடைய தகுதி தேவன் மூலமாய் வருகிறது.*

***நம்முடைய தகுதி என்பது என்ன?***

*தேவன் கொடுத்த வாழ்க்கையை அவரின் திட்டத்தின் படி முடிந்த அளவுக்கு வாழ்வதே தகுதி ஆகும். கிறிஸ்தவர்களாகிய நாம் வாழ கூடிய சூழ்நிலைமையானது தெய்வீக வல்லமையை சார்ந்தே வாழ வேண்டும் என்று உள்ளது.*

*நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையானது தேவ ஆவியானாலேயே வெளிப்படுத்தப் படுகிறது. வேதத்தை மீறின ஒரு தகுதியை நாம் எதிர்பார்க்க வேண்டிய அவசியம் இல்லை.*

*உலக காரியங்களுக்கு ஏற்ற காரியங்கள் நிறைய உண்டு அனால் ஆவிக்குரிய வாழ்க்கை வாழ்வதற்கும் ஊழியம் செய்யவும் நமக்கு ஆண்டவருடைய வார்த்தையே போதுமானது.*

*நமக்கு விசுவாசிகள் என்னும் தகுதி தேவனால் உண்டாகி உள்ளது.*

***2 கொரிந்தியர் 9:8, மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்***

தேவன் நமக்கு போதுமானவர்

- ✓ *அவரே நம் மூலதனம்*
- ✓ *அவருடைய திறனிற்கு அளவில்லை*
- ✓ *எல்லா கிருபையும் அவர் மூலமே வரும்*

- ✓ *எல்லாம் அவரால் நிறைந்து உள்ளன*
- ✓ *எப்போவாவது அல்ல எப்பவுமே*
- ✓ *கொஞ்சம் அல்ல அவரால் வரும் நற்கிரியைகள் பலவாகும்*

***2 கொரிந்தியர் 9:10, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்***

*உங்களிடம் யாராவது வந்து வேதாகமம் போதுமானது அல்ல என்று கூறினால், நமக்கு தெரிந்து இருக்கவேண்டியது என்னவென்றால்,* ***வேதகாமத்தால் தீர்க்கமுடியாத பிரச்சனை ஒன்று எதுமே இல்லை!***

- ✓ *நம்முடைய தகுதி தேவனால் வருகிறது மற்றும்*
- ✓ *நமக்கு அவரே போதுமானவர்.*

*நமக்கு தேவன் போதுமானவர், நமக்கு வேண்டியவை எல்லாம் அவர் மூலமாய் தான் வரும். அதுமட்டுமில்லாமல் நமக்கு அவர் கொடுப்பவை எல்லாம் தேவ ஆவியினாலும் அவருடைய வார்த்தையினாலும் தான் நமக்கு கிடைக்கும்.*

*யோவான் எழுதிய சுவிசேஷத்தில் இயேசு அவரை விசுவாசிப்பவர்கள் பரிசுத்தமாக்கப்படுதல் குறித்து கூறியிருக்கிறார்.*

***யோவான் 17:17, உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்***

*"பரிசுத்தமாக்கப்படுதல்" என்பது பாவத்திலிருந்தும் அசுத்தத்திலிருந்தும் தேவனுக்கு என்று பிரித்து*

*எடுக்கப்படுதல் ஆகும்.'' நாம் கிறிஸ்துவுக்குள் முழுமையாக பரிபூரணப்பட வேண்டும் என்பதை குறிக்கும்.*

*அவர் சொல்லுகிறார் "தேவனே அவர்களை சுத்தமாக்கி பரிசுத்தமாக்கும், உம்முடைய சத்தியத்தால், அவர்களை பாவத்துக்கு விலக்கி உம்மிடமாய் சேர்த்து கொள்ளும்.'' அதே வசனத்தில், ''உம்முடைய வசனமே சத்தியம்'' என்கிறார்.*

*விசுவாசிகளின் பரிசுத்தமாகுதலின் முழுமை என்பது தேவனுடைய வார்த்தையால் மட்டுமே சாத்தியமாகும்.*

*தேவனுடைய வார்த்தையினால் மட்டும் அல்லவென்றும் நீங்கள் அதில் ஏதேனும் சேர்த்து கொண்டால் அது ஒரு மத வழிபாடு போல் ஆகிவிடும்! அவர்கள் ஏற்கனவே தேவனுடைய வார்த்தையோடு சொந்த கருத்தையும் சேர்த்து மத வழிபாடு போல் ஆக்கிவிட்டதை நாம் காணமுடியும்.*

*மீகா தீர்க்கதரிசி மூலமாய் தேவன் சொல்லும் காரியத்தை கவனியுங்கள்.*

***மீகா 2:7, யாக்கோபு வம்சம் என்று பேர் பெற்றவர்களே கர்த்தரின் ஆவி குறுகியிருக்கிறதோ? அவருடைய கிரியைகள் இவைகள்தானோ? செம்மையாய் நடக்கிறவனுக்கு என் வார்த்தைகள் நன்மை செய்யாதோ?***

- ✓ *வாழ்க்கையில் நாம் நன்மைகளை பெற்று கொள்ள தேவனுடைய வார்த்தையே மூலதனம்.*
- ✓ *நீதியின் பாதையில் நடக்கிற விசுவாசிகள் தேவ வார்த்தையின் மூலமாகவே நன்மைகள் பெறமுடியும்.*
- ✓ *தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதின் மூலம் எல்லா நன்மைகளையும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.*

***1 கொரிந்தியர் 2:13-16, 13. அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்த ஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, ஆவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக்காண்பிக் கிறோம்.14. ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவை களானதால், அவைகளை அறியவுமாட்டான்.15. ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.16. கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.***

- ✓ *தேவ ஞானம் நமக்கு மனிதர்கள் மூலமாய் வருவது இல்லை.*
- ✓ *தேவ ஞானம் நமக்கு தேவ ஆவியானவரின் மூலமாய் கிடைக்கிறது.*
- ✓ *அந்த ஞானமானது விரிவானது, பயனுள்ளது மற்றும் முழுமையானது.*
- ✓ *தேவ வார்த்தையின் அறிவின் மூலம் எல்லாவற்றையும் புரிந்து கொள்ள போதுமானது.*
- ✓ *நமக்குள் இருப்பது கிறிஸ்துவின் சிந்தையே.*

*கிறிஸ்துவின் சிந்தையே முழு நிறைவான தேவனின் சிந்தை.*
*கிறிஸ்துவின் சிந்தையே எங்கும் நிறைந்தது.*
*கிறிஸ்துவின் சிந்தையே சிறந்தது.*
*கிறிஸ்துவின் சிந்தையை அளவிடமுடியாதது.*

*தேவனின் வார்த்தையே நமக்கு நியாயந்தீர்க்கவும், மதிப்பீடு செய்யவும், கணக்கிடவும், புரிந்துகொள்ளவும், அறிந்துகொள்ளவும் மற்றும் எல்லாக்காரியங்களையும் முன்னோக்கவும் உதவுகிறது.*

***ஏன்?***

*ஏனென்றால் அது நமக்கு கிறிஸ்துவின் சிந்தையை தருகிறது. கிறிஸ்துவின் சிந்தையே நமக்கு போதுமானதாக நிறைவானதாக உள்ளது.*

***மாற்கு 12:24, இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள்?***

*இங்கு இயேசு சொல்லுகிறார் நீங்கள் தேவனுடைய வல்லமையை புரிந்து கொள்ள வேத வாக்கியங்களை அறிந்து இருக்க வேண்டும் என்று.*

***மத்தேயு 4:4-10,***

*பிசாசு இயேசுவை வனாந்திரத்தில் சோதிக்கும் போது, இயேசு என்ன செய்தார்?*

*இயேசு பிசாசானவனை எப்படி கையாண்டார்?*

*இயேசு அவனை நோக்கி உன்னை கட்டுகிறேன்,உன்னை நரகத்திற்கு அனுப்புகிறேன், உன்னை பாதாளத்திற்கு அனுப்புகிறேன் என்று கூறினாரா?*

*அவர் பிசாசுக்கு ஏதேனும் வழிமுறைகளை சொன்னாரா?*

*இதற்கு விடை மிகவும் எளிதானது!*

*எழுதி இருக்கிறதே*

*இயேசு, பிசாசு அவரை சோதித்த மூன்று முறையும் அவர் ஒரே மாதிரி தான் பதிலளித்தார்*

*தேவனுடைய வல்லமை எப்படிப்பட்டது என்று வேத வார்த்தை நமக்கு விளக்குகிறது. வேதம் சொல்லுகிறது இயேசுவுக்கு அந்த மூன்று சோதனைகளும் முடிந்த பின்பு பிசாசு அவரை விட்டு விலகினான் என்றும் தேவ தூதர்கள் அவருக்கு பணிவிடை செய்தார்கள் என்றும் கூறுகிறது.*

***எபிரேயர் 4:12, தேவனுடைய வார்த்தையானது ஜீவனும்***